Registered as a Newspaper  பக்கங்கள் 06  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஆவணி 07  [23-08-1993]  திங்கட்கிழமை  ஓசை 186

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## விஜேதுங்கவின் பாதுகாவலர்களுக்கு போலித் தலைமுடிகள் இறக்குமதி

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் மெய்ப்பாதுகாப்புப் பிரிவில் இருக்கும் அதிரடிப்படையினர் அணிவதற்கு போலித் தலைமுடிகள் (விக்) வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. இம் மெய்ப்பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தினரைப்போல் சிகைஅலங்காரம் செய்துகொள்ளவேண்டியிருப்பதால் எதிரிகளால் இலகுவாக அடையாளம் காணக்கூடியதாக இருப்பது பாதுகாப்பிற்கு பெரும் இடையூறாக இருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் சாதாரண உடை அணிந்திருந்த போதும் தலை இவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகிறதாம். எனவே வித விதமான போலித் தலைமுடிகள் விசேட உத்தரவின்பேரில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கிளாலி மீது அகோர எறிகணை வீச்சு;

# இரு பெண்கள், இரு குழந்தைகள் பலி

## பலர் காயம், வீடுகள் சேதம்

[பொ. இராசேஸ்வரன்]

பூநகரி இராணுவ முகாமில் இருந்து கிளாலி மற்றும் பண்டிதர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இராணுவம் பலத்த எறிகணைத் தாக்குதலை நடத்திவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று பிற்பகல் 2. 30 மணியளவில் இருந்து இடம்பெற்றுவரும இத்தாக்குதலினால் இரு பெண்கள், இரு குழந்தைகள் ஆகிய நால்வர் பலியாயினர். பலர் காயமடைந்தனர். வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் கிளாலி கடற்கரையை அண்மித்த கடற்பரப்பிற்குள் திடீரெனப் பிரவேசித்த சிறிலங்கா கடற்படையின் விசைப்படகொன்று கரையோரத்தை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்தியது. அதே வேளை பூநகரி இராணுவ முகாமிலிருந்தும் கிளாலி, பண்டிதர் குடியிருப்பு ஆகியவற்றின்மீது கடும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது.

குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட இவ் எறிகணை வீச்சின்போது எறிகணை ஒன்று பண்டிதர் குடியிருப்பு பாடசாலை அண்மையில் வீழ்ந்து வெடித்தபோது ஒரு பெண்ணும், குழந்தையும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஷெல் வீச்சின்போது மனோகரன் தேவராஜா(வயது3)என்பவரும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். மற்றொரு எறிகணையும் அதற்கு அண்மையாக வீழ்ந்து வெடித்தபோது மற்றுமொரு பெண்ணும் பலியானர். இதேவேளை, இத்தாக்குதலில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த உதயகுமார் (வயது 15) என்பவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது இரு வீடுகள் பலத்த சேதமடைந்ததாகவும்: கரையோரத்தில் நின்ற ஐந்து படகுகளும் சேதமடைந்தன. இதேவேளை 50 கலிபர் தாக்குதலினால் கிளாலிக் கரையில் நின்ற லொறிகளும் சேதமடைந்ததாகத் தெரியவருகின்றது.

## மண்ணெய் விலை வீழ்ச்சி

யாழ். குடாநாட்டில் மண்ணெயின் விலை வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் கடைகளில் வழமையைவிட மண்ணெண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

இதே சமயம் கொழும்பிலிருந்து ருகுணு கப்பலில் ஏற்றி வரப்பட்ட மூவாயிரம் பீப்பா மண்ணெய் விரைவில் விநியோகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் வர்த்தகர்களுக்கு என ஏற்றிவரப்பட்ட இந்த மண்ணெய் மட்டுப்படுத்தப்பட்ட விலையில் விற்பனை செய்வதற்கு ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

இதனால் தனியார் கடைகளில் மண்ணெயின் விலை மேலும் வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4000 மெ. தொன் மாவுடன் இன்று வாதுவ வருகிறது

(வடமராட்சி)

கொழும்புத்துறைமுகத்திலிருந்து 4000 மெற்றிக்தொன் மாவுடன் புறப்பட்ட 'வாதுவ' கப்பல் இன்று காலைபருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேரும்.

இக்கப்பலில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது, விதை நெல்லும் எடுத்துவரப்படுகிறது.

அதே சமயம் பருத்தித்துறை இறங்குதுறையில் மண்ணெண்ணெய் பரல்களை இறக்கி முடித்த 'ருகுணு' கப்பல் நேற்று பிற்பகல் கொழும்பு நோக்கி புறப்பட்டது. (யோ)

## பொதுப் பதுங்கு குழிகளில் மக்கள் தீவிர கவனம்

(நமது நிருபர்)

யாழ் நகரின் பிரதான வீதி ஓரங்களில் பொதுப் பதுங்கு குழிகள் அமைக்கும் பணியில் மக்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிலங்கா விமானப்படை விமானங்களின் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் நோக்குடனேயே யாழ் நகரை அண்டிய பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளின் இருமருங்குகளிலும் இளைஞர்கள் இரவு பகலாக இப் பதுங்கு குழிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

## இயக்கச்சிப்பகுதி மோதலில் கப்டன் அன்பு வீரச்சாவு



இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இரவு 11-30 மணியளவில் இடம்பெற்ற இம்மோதலில் கப்டன் அன்பு (கந்தசாமி கண்ணதாசன், மீசாலை வடக்கு, கொடிகாமம்) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த இப்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 150லட்சம் பெறுமதியான குண்டுதுளைக்காத கார்

### காமினி கொள்வனவு

(கொழும்பு)

காமினி திசநாயக்கவினால் ... தன் சொந்தப் பாதுகாப்பிற்காக தனது சொந்தப் பணத்

## என் வாகனத்தின் முன் இருவர் சிதறிப் பலியாகினர்

[தென்மராட்சி]

வாகனத்தின் முன்புறம் ஷெல் ... வீழ்ந்து துடி துடித்ததைக்

## படகு ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

## மக்கள் தீவிர கவனம்

(நமது நிருபர்)

யாழ் நகரின் பிரதான வீதி ஓரங்களில் பொதுப் பதுங்கு குழிகள் அமைக்கும் பணியில் மக்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிலங்கா விமானப்படை விமானங்களின் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் நோக்குடனேயே யாழ் நகரை அண்டிய பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளின் இருமருங்குகளிலும் இளைஞர்கள் இரவு பகலாக இப் பதுங்கு குழிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

# 150லட்சம்பெறுமதியான குண்டுதுளைக்காத கார்

## காமினி கொள்வனவு

(கொழும்பு)

காமினி திசநாயக்கவினால் கொள்வனவு செய்யப்பட்டு சுங்கப்பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த குண்டு துளைக்கமுடியாத மோட்டார் வாகனம் சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அவரிடமே ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவீடனில் தயாரிக்கப்பட்ட இந்த ஆடம்பர வாகனத்தின் பெறுமதி இலங்கைப் பணத்தில் 150 லட்சத்திற்கும் அதிகமாகும். காமினி திசநாயக்க தன் சொந்தப் பாதுகாப்பிற்காக தனது சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்திருந்தார்.

இவ்வாகனம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் உத்தரவின் பேரில் சுங்கப் பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது காமினி திசநாயக்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் இதனை அடுத்து இவ்வாகனம் அவரிடம் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆண்டான்குளப் பகுதியில் இரு இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆண்டான் குளப் பகுதியில் இரு பொது மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்து முகாம் கொண்டு சென்றுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை மதுரங்குளம் என்னும் இடத்தில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பனிச்சங்கேணி நடுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்களான காத்தமுத்து சந்திரகுமார் (வயது 21), சந்தையா அற்புதராசா (வயது 23) ஆகிய இரு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கிளாலி கடற்கரையை அண்மித்த கடற்பரப்பிற்குள் திடீரெனப் பிரவேசித்த சிறிலங்கா கடற்படையின் விசைப்படகொன்று கரையோரத்தை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்தியது. அதே வேளை பூநகரி இராணுவ முகாமிலிருந்தும் கிளாலி, பண்டிதர் குடியிருப்பு ஆகியவற்றின்மீது கடும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது.

குடியிருப்புக்கள் மீது நடத்தி சாலை அண்மையில் வீழ்ந்து வெடித்தபோது ஒரு பெண்ணும், குழந்தையும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஷெல் வீச்சின்போது மனோகரன் தேவராஜா (வயது3) என்பவரும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். மற்றொரு எறிகணையும் அதற்கு அண்மையாக வீழ்ந்து வெடித்தபோது மற்றுமொரு பெண்ணும் பலியானர். இதேவேளை, இத் தாக்குதலில் பலர் காயமடைந்த உதயகுமார் (வயது 15) என்பவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது இரு வீடுகள் பலத்த சேதமடைந்ததாகவும் கரையோரத்தில் நின்ற ஐந்து படகுகளும் சேதமடைந்தன. இதேவேளை 50 கலிபர் தாக்குதலினால் கிளாலிக் கரையில் நின்ற லொறிகளும் சேதமடைந்ததாகத் தெரியவருகின்றது.



இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இரவு 11-30 மணியளவில் இடம்பெற்ற இம்மோதலில் கப்டன் அன்பு (கந்தசாமி கண்ணதாசன், மீசாலை வடக்கு, கொடிகாமம்) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த இப்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# என் வாகனத்தின் முன் இருவர் சிதறிப் பலியாகினர்

[தென்மராட்சி]

"எனது வாகனத்தின் முன்னால் திடீரென ஷெல் விழுந்து வெடித்தது. அப்பொழுது பாடசாலைக்கு அருகாமையில் பதுங்கியிருந்த பெண்ணும் குழந்தையும் வீழ்ந்து துடிதுடித்தனர்" இவ்வாறு நேற்று பண்டிதர் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணை வீச்சின்போது சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

லொறிச் சாரதியான கு. பூபாலசிங்கம் (யாழ்ப்பாணம்) என்னும் அவர் எமது தென்மராட்சிச் செய்தியாளருக்கு மேலும் தகவல் தருகையில் "நான் எனது லொறியை பண்டிதர் குடியிருப்பின் ஊடாக செலுத்திக்கொண்டிருந்தேன் அப்பொழுது பாடசாலைக்கு முன்பாக ஒரு பெண்மணி குழந்தையொன்றுடன் பேலே பார்த்தபடி பதுங்கியிருந்தார் தூரத்தில் சில ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டபடி இருந்தன. திடீரென எனது வாகனத்தின் முன்புறம் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது. அப்பெண்ணும் குழந்தையும் வீழ்ந்து துடிதுடித்ததைக் கண்டேன் நானும் என்னுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சினால் மக்கள் இடம்பெயர்வு

[தென்மராட்சி]

நேற்று பிற்பகல் 2 30மணி தொடக்கம் பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கிளாலிப்பகுதியை நோக்கி கடும் எறிகணை தாக்குதல் நடைபெற்றது. இதனால் இப் பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பானஇடம்நோக்கி இடம் பெயர்ந்தனர்.

கிளாலி, பண்டிதர் குடியிருப்பு, அல்லிப்பளை ஆகியபகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து பளை, புலோப்பளை, எழுதுமட்டுவாள், கச்சாய் போன்ற பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் இப்பகுதிகளில் உள்ள ஆலயங்கள், சந்தை, பொது நூலகம் போன்ற கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். [86]

# கடற்படைப் படகு கிளாலிகடலில்மூழ்கியது?

(தென்மராட்சி)

சிறிலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான விசைப் படகொன்று கிளாலிக் கடற்பரப்பில் கவிழ்ந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் படகு கவிழ்ந்ததைத் தொடர்ந்து அதனை மீட்கும் முயற்சியில்கடற்படையினர்ஈடுபட்டு வருவதாகவும் இம் முயற்சிக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கிலேயே கரையோரப் பகுதியை நோக்கி கலிபர் தாக்குதலும், பீரங்கித் தாக்குதலையும் சிறிலங்கா படையினர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## படகு ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டைவழங்கல்

கிளாலி - பூநகரிக்கிடையிலான படகுச்சேவையில் ஈடுபட்டுள்ள படகு ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதால் சகல படகுத்துறைப் பொறுப்பாளர்கள், படகு உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் ஆகியோரை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு புலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகை தரும்படி யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

வரும்போது படகுச் சேவையில் பாவிக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களையும் கொண்டுவரும்படி அவர் கேட்டுள்ளார்

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை நாளை செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## பல்லேகல முகாமிலிருந்து இரு இளைஞர் விடுதலை

(வவுனியா)

கண்டி பல்லேகல புனர்வாழ்வு முகாமில் பலகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் இருவர் கடந்த 20ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த மகாலிங்கம் பொன்னுத்துரை (வயது 30), மற்றும், நாகர் கோவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா துரைரத்தினம் (வயது 28) ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலையானவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்று வடபகுதிக்குள் வந்து சேர்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் 200 தமிழ் யுவதிகள் தடுத்துவைப்பு

## கொழும்பில் பெண்கள் கைது அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் அண்மைக்காலமாக இளம் தமிழ்ப்பெண்கள் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பெயரில் தடுத்து வைக்கப்படுவது அதிகரித்து வருகிறது. பொறளையிலுள்ள குற்றப் புலனாய்வுத் தலைமை அலுவலகத்தில் மட்டும் 200க்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினமும் கோட்டைபுகையிரத நிலையத்தில் வைத்து 25க்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் சிறிலங்கா புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்ட 200க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் பொரளை குற்றப் புலனாய்வுத் தலைமையகத்தில்தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து விடுதலையாகி நேற்று வடபகுதி வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்

கடந்த 12ஆம் திகதி பொரளை குற்றப் புலனாய்வுத் தலைமையகத்திலிருந்து விடுதலையாகிய சிவகுரு த[illegible] பாலசிங்கம் (வயது 46, மு[illegible]ரைக்கட்டை வல்வெட்டி[illegible]துறை) என்பவரே இத்தகவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்மைக்காலமாக கொழும்பில் கூடுதலாக பெண்களே கைது செய்யப்பட்டு பொரளை குற்றப் புலனாய்வுத்துறை தலைமையகத்திற்குக் கொண்டு வரப்படுகின்றனர் என்றார்.

இதேவேளை நேற்று முன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவிலிருந்தும் ஷெல் வீச்சு

(தென்மராட்சி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை கிளாலியை நோக்கி படையினர் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். நேற்று மாலை 4.00 மணியளவில் படையினர் நடத்திய இத் தாக்குதலினால்ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. (86)

## பரப்புக்கடந்தானில் புக்காரா தாக்குதல்

விமானங்களும் அடுத்தடுத்து பல குண்டுகளை வீசின.

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் காட்டுப்பகுதிகளில் சிறிலங்காவின் குண்டுவீச்சு விமானங்கள் அகோர குண்டுவீச்சு தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் இரு புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் பரப்புக்கடந்தான் காட்டுப் பகுதியிலேயே இத் தாக்குதலை மேற்கொண்டன.

மீண்டும் 12.15 மணியளவில் கட்டையடம்பன் காட்டுப் பகுதிக்கு வந்த இரு புக்காரா

## தீவகத்திலும் தடை

[வடமராட்சி]

தீவகத்திற்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு சிறிலங்கா இராணுவம் கட்டுப்பாட்டை விதித்துள்ளது. பால்மா, உணவு வகைகள் எடுத்துச் செல்ல அங்குள்ளவர்கள் இராணுவத்தினரின் அனுமதி பெறவேண்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### எலற்றிக் வெல்டர் தேவை

பிரபலியமான மோட்டார் திருத்தும் தொழிலகத்திற்கு அனுபவம் வாய்ந்த எலற்றிக் வெல்டர் தேவை. தகுதியுள்ளோர் நேரில் தொடர்பு கொள்ளவும். திருமணமாகாதவர் விரும்பத்தக்கது. மிகுதி நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு. துரைமோட்டார் உயிரூட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-7227)

### நீமியா உரம்

"ஏரினும் நன்றால் எரு விடுதல் கட்டபின் நீரினும் நன்றதன்காப்பு" (திருக்குறள்) சுமமா உழுதலைப் பார்க்கினும் எருவிட்டு உரம் வைத்தல் சிறந்தது. களையெடுத்தபின் நீர் பாச்சுவதைப் பார்க்கிலும், பயிரை அழிவு எய்தாமல் காப்பது சிறந்தது.

எரு விட்டு நீமியா உரம் வைத்தால் மண்வளம் பெருகுவதுடன் பயிரை அழிக்கும் பூச்சிகளை விரட்டி அழிவிலிருந்தும் காக்கிறது "மிக்கி வைற்" (சி-7233)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் அமைந்துள்ள 15 பரப்பு தோட்டக்காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி தி. சோமனாதன் விக்கர் ஒழுங்கை பலாலி வீதி, திருநெல்வேலி. (5759)

### பரீட்சைகளை இங்கு நடத்தவும்

அரச திணைக்களங்களில் சிற்றூழியராக சேவையாற்றுவோரை எழுதுவினைஞர் தரம் ii (ஆ) பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவை தரம் ii (ஆ) பிரிவுக்கும் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை இங்கு நடாத்த ஒழுங்கு செய்து தருமாறு அரச அதிபருக்கும் கல்விப் பணிப்பாளருக்கும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போதைய போக்குவரத்து கஷ்டம் காரணமாக கொழும்பு சென்று பரீட்சைக்கு தோற்றுவது மிகக் கஷ்டமான காரியம் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீர் இறைப்பு இயந்திரங்கள் விநியோகிக்க நடவடிக்கை

வடமராட்சிப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கமநலச் சேவை நிலையங்கள் 29 நீர் இறைக்கும் இயந்திரங்களையும் 1260 வாளிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளன.

அம்பன் கமநலச் சேவை நிலையப் பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு 07நீர் இறைக்கும் இயந்திரங்களும் 610 வாளிகளும் புலோலி கமநலச் சேவை நிலையப் பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு 22 நீர் இறைக்கும் இயந்திரங்களும் 650 வாளிகளும் வழங்கப்படவுள்ளன இந் நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கும், வாளிகளுக்குமான முற்பணங்களை விவசாயிகள் கமநலச் சேவை நிலையங்களில் செலுத்தியிருந்தனர். வைகாசி மாதம் இதற்கான முற்பணங்களைக் கட்டிய விவசாயிகளுக்கே இந் நீர் இறைக்கும் இயந்திரங்களும் வாளிகளும் வழங்கப்படவுள்ளன ஆனி மாதத்தில் முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், வாளிகள் கொழும்பிலிருந்து மீண்டும் தருவிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

இந் நீரிறைக்கும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை 21ஆம் திகதி ஆரம்பமாகுமென்றும் வாளிகள் வழங்கும் நடவடிக்கைகள் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## அறிவித்தல்

24-08 93 செவ்வாய்க்கிழமை இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவிருந்த நல்லூர் இசை மன்றம் வழங்கும் சாந்தன் குழுவினரின் இன்னிசை கான நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

நல்லூர் இசைமன்றம்,
யாழ்ப்பாணம்.
(5758)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராசா கந்தசாமி
[தொண்டமனாறு]

எமது அன்புக்கும், பண்புக்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாகி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே, பாசந்தனை பொழிந்து பண்புதனை வளர்த்து குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளிர்ந்து எமக்கெல்லாம் கலங்கரை விளக்காகிய தானைத் தலைவனே, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (23-08-1993) இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் 2ம் ஆண்டு நினைவஞ்சலியில் உற்றார் உறவினரை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மணியம் மடம்"
செல்வச்சந்நிதி,
தொண்டமனாறு.

குடும்பத்தினர்
(சி-7241)

## ஓராண்டு நினைவலைகள்



### 2ம் லெப். விழி
[சங்கரப்பிள்ளை நிமலேஸ்வரி]

அன்னை மடியில்:- 20-09-1965
ஆண்டவன் அடியில்:- 03-09-1992

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 23-3-73

வீரச்சாவு: 23-08-90

### 2-ம் லெப் சின்ன அல்பேட்
[சடாட்சரம் - தனேஸ்வரன்]

கூன்விழுந்த முறைமாற்றி நெஞ்சுதமிழ்த் தாயினையே தேன்பொழிய தமிழீழத் திருநாட்டில் - மேன்மையுற சின்ன அல்பேட் டென்னும் இளவேங்கை தனேஸ்வரன் தன்னுயிரை நீத்தானென் றறி.

வீனஸ் தங்க மாளிகை,
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு,

(5754)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-23

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் தாளையடி-வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**தீசன்/குமரிநாடன்** (செல்லத்துரை செல்வநாயகம் - கோயில் குஞ்சுக்குளம், ஓமந்தை, வவுனியா)

1985ஆம் ஆண்டு கிளிநொச்சி - உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விவேகன்** (முருகர் சிவனேஸ்வரன் - கண்டாவளை, பரந்தன்-கிளிநொச்சி)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் ஏற்பட்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து தமிழகத்தில் சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**மானா** (செல்லையா சுப்பிரமணியம்-மாசார்-பளை)

1989ஆம் ஆண்டு மன்னாரில் இந்தியப்படையினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

யாழ்-ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட வியாபாரியான தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சத்தியா/சித்தியா** (— — —)

ஊர்காவற்துறையில் 2-வது தடவையாக உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிரதீஸ்/பிரதீப்** (வன்னியசிங்கம் வரேந்திரன்-வந்தாறுமூலை, செங்கலடி-மட்டு)

**விக்னா** (சித்திரவேலு சசிகரன்-2-ம் கொலனி, கந்தளாய் -திருமலை)

**பாபுஜி** ஐயாத்துரை அருட்செல்வன் - சந்தைவீதி-காங்

## பரீட்சைகளை இங்கு நடத்தவும்

அரச திணைக்களங்களில் சிற்றூழியராக சேவையாற்றுவோரை எழுதுவினைஞர் தரம் ii (ஆ) பிரிவுக்கும் தட்டெழுத்தாளர் சேவை தரம் ii (ஆ) பிரிவுக்கும் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை இங்கு நடாத்த ஒழுங்கு செய்து தருமாறு அரச அதிபருக்கும் கல்விப் பணிப்பாளருக்கும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போதைய போக்குவரத்து கஷ்டம் காரணமாக கொழும்பு சென்று பரீட்சைக்கு தோற்றுவது மிகக் கஷ்டமான காரியம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

சுப்பிரமணியம் செல்லப்பா மற்றும் பாக்கியம் செல்லப்பா ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையின் முன்பாக கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பளைக் கொத்தணிப் பாடசாலைகள் எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக பளைக் கொத்தணி அதிபர் சு. புண்ணியசீலன் அறிவித்துள்ளார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தவறாது பாடசாலைக்கு சமுகம் தருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## பொலிஸ் பதவி உயர்வு இன்ஸ்பெக்டர்கள் ஆட்சேபம்

மலையக பொலிசாரின் பதவி உயர்வு குறித்துப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தலைவர் யூ ஏ ஷெரூ தீன் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்துள்ளனர். ஸ்ரீலங்கா பொலிஸ் சேவையில் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக 279 பேர் இருக்கும் போது கனிஷ்ட பிரிவைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அரசியல் ரீதியில் பதவி உயர்த்தப் பட்டுள்ளதாகவும் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் பற்றிய சுபசிங்கா குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---



செல்வன்

## செல்வராஜா கலாமோகன்

டோகாவில் பிறந்து புத்தூர் மேற்கு புத்தூரில் வசிக்கும் செல்வராஜா அனுஷ்குமாரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செ கலாமோகன் தனது இல்லத்தில் [23 08 93] இன்று முதலாவது பிறந்த நாளை மிகவும் குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பா, அத்தைமார் ஆனைக்கோட்டையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், டோகாவில் இருக்கும் சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் கிருஷ்ணன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

தகவல்:-

தேவு வீதி,
ஆனைக்கோட்டை.

மா. அருணகிரிநாதன் (மாமா)
(ஈழநாதம்)

(சி-7238)

---

# பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில்
இயங்கிக் கொண்டிருக்கும்
அச்சகத்திற்கு

கணக்குப் பதியுனர் (*BOOK KEEPER*)
தேவை

உரிய தகைமைச் சான்றிதழ்களுடனும், வேலை அனுபவச் சான்றிதழ்களுடனும 25-08 1993 புதன் கிழமை காலை 10 00 மணிக்கு ஈழநாதம் பணி மனைக்கு நேரில சமுகம் தரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
தங்குமிடவசதியும், சாப்பாடும் ஒழுங்கு செய்து தரப்படும்.

## ஈழநாதம்

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

---



## 2ம் லெப். விழி

[சங்கரப்பிள்ளை நிமலேஸ்வரி]

அன்னை மடியில்:- 20-09-1965
ஆண்டவன் அடியில்:- 03-09-1992
திதி:- 23-08-1993

ஏழாலையில் வந்துதித்த நிமலேஸ்வரியே
தலைவனின் பாதையில் சென்று விழியானாய்
மகளிர் படை பிரிவின் தலைமையின் கீழ்
செயல் பட்டுக் கொண்டிருந்த அன்றொரு நாள்
பாதையோரத்தில் பகல் வேளை நேரத்தில்
அகாலமாய் நீ அங்கு செல்ல வேண்டுமா!
நாம் அலறல் கொள்ள வேண்டுமா!
காலம் இருக்க நேரம் இருக்க - ஒரு
நெஞ்சை பிழியும் நிகழ்வெமக்கு வந்ததோ
ஆண்டு ஒன்று சென்றாலும் - உன்
நினைவு எம்மை விட்டு அகலுமா

உனது ஆத்ம சாந்திக்காக - எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் கலங்கி நிற்கும்
அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

ஏழாலை மேற்கு.
(5709)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

## வீரவேங்கை விக்னா

[சித்திரவேல் சசிகரன்]

கந்தளாய், திருமலை.

பிறப்பு 04-10-1974
வீரச்சாவு 23-08-1990

சுதந்திர விடுதலைக்காய் புயலென எழுந்த
புலிவீர மறவனே விக்னா
தாயகக் கனவை ஏந்தி நடந்த
உன் நிமிர்ந்த சுவடுகள்
என்றுமே அழியாது ஏனெனில்
அது வேட்கை கொண்டெழுந்த
வேங்கைகள் நெஞ்சினில்
வேள்வியாய் பதிந்துவிட்டது.
தோழனே! மரணத்தைப் போலவே
உன் இலட்சியமும் நிலையானது.
அதனால் தான் வீழ்ந்த விதை உனது
இலட்சியம் எமக்கு வேதங்களானது.

இன்று (23 08 1993) இவரது வீட்டில் நடைபெறவிருக்கும் 3-ம் ஆண்டு நினைவஞ்சலியில் அனைத்துபோராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மீசாலை வடக்கு.
கொடிகாமம்.

- குடும்பத்தினர்.

(சி-7242)

---

வெய்திய,

**விவேகன்** (முருகர் சிவனேஸ்வரன் - கண்டாவளை, பரந்தன்-கிளிநொச்சி)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் ஏற்பட்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து தமிழகத்தில் சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**மானா** (செல்லையா சுப்பிரமணியம்-மாசார்-பளை)

1989ஆம் ஆண்டு மன்னாரில் இந்தியப்படையினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

யாழ்-ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட வியாபாரியான தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சத்தியா/சித்தியா** (— — —)

ஊர்காவற்துறையில் 2-வது தடவையாக உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிரதீஸ்/பிரதீப்** (வன்னியசிங்கம் வரேந்திரன்-வந்தாறுமூலை, செங்கலடி-மட்டு)

**விக்னா** (சித்திரவேலு சசிகரன்-2-ம் கொலனி, கந்தளாய் -திருமலை)

**பாபுஜி** ஐயாத்துரை அருட்செல்வன் - சந்தைவீதி-காங்கேசன்துறை)

**2-ம் லெப். சின்னஅல்பேட்** (சடாட்சரம் தனேஸ்வரன்- கஸ்தூரியார்வீதி-யாழ்)

காரைநகரில் எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த,

**சாந்தன்** (அமிர்தநாதன் ஜோன்தோமஸ்-8-ம்வட்டாரம், நெடுந்தீவு மத்தி)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட ஐயங்கேணி வாசி. இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட கொம்மாந்துறை உமாமில் வீதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி எல்லைநகர்ப் பகுதியில் வெட்டிக் கொல்லப்பட்ட தமிழ்மகன் முஸ்லிம் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர் 4, மருத்துவமனைவீதி வாசி. ஆறுமுகத்தான் குடியிருப்பில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட ஒருவர் ஆகிய 05 தமிழர்கள்.

மன்னார் - பூநகரிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

யாழ்-கன்னாதிட்டி, பொம்மைவெளி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் விமானங்கள் மற்றும் உலங்குவானூர்திகள் மூலம் மேற்கொண்ட பாரியவான் தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தை, சிறுமி உட்பட 12 தமிழர்கள். மிருசுவில் மருத்துவமனையின்முன் நடாத்தப்பட்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட நாராந்தனை மேற்கைச்சேர்ந்த தமிழ்ச்சிறுவன். சாவகச்சேரி சிற்றூர்தி ஒன்றின் மீது உலங்குவானூர்தியிலிருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட குழந்தை நாவற்குழியில் உலங்குவானூர்தியிலிருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு-மியாங்குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த.

**சுது** (பிரகாசம் ரஞ்சன்-ஊறணி-பொத்துவில்-அம்பாறை]

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் தர்மன் ரவி** (இராசதுரை ரவீந்திரகுமார் - மகான் வீதி, கோப்பாய்வடக்கு-யாழ்)

யாழ்-பண்ணை இறங்குதுறை மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சின் போது பாதுகாப்புத் தேடி கடலில் குதித்தபோது கடலில் நீரில்மூழ்கிப் பலியான தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி. 7240)

நல்லூர் [illegible] நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

# கண்ணிவெடி தயாரித்த ஜே. வி. பியினர் கைது

## புலிகளுடன் தொடர்பு உண்டாம்

(கொழும்பு)

தெற்கில் நிலக் கண்ணிவெடி தயாரிப்பில் ஈடுபட்டுவந்த தாகக் கூறப்படும் ஜே வி.பி சந்தேக நபர் ஒருவர் அம்பாந்தோட்டை பொலிசாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

கோனொருவ சூட்டி என அழைக்கப்படும் இவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் தொடர்புகள் இருந்து வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்ததாகவும் கூறப்பட்டது.

நிலக் கண்ணிவெடி இதுவரை காலம் புலிகளே உள்ளூரில் தயாரித்து வந்தனர். அவர்களின் ஆலோசனையை பெற்றே இவரும் தெற்கில் நிலக்கண்ணி வெடி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார் என பொலிசார் நம்புகின்றனராம்.

அம்பாந்தோட்டை மாவட்ட ஜே. வி. பி இராணுவப் பிரிவு தலைவராக இவர் இருந்ததாகவும் பொலிசார் மீதான பல தாக்குதலை இவர் நடத்தியிருந்ததாகவும் பொலிசார் கூறினர்.

# நோபல் பரிசு பெற்றோர் தூதுக்குழு இலங்கை வரும்

(கொழும்பு)

நோபல் பரிசு பெற்றோரின் தூதுக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளத்தயாராக இருப்பதாகவும், இக்குழு நோபல் பரிசு பெற்ற நால்வரின் சமாதான திட்டம் குறித்து அரசுடனும் பேச விருப்பதாகவும் உலகலாளவிய ஒத்துழைப்பிற்கான உலகசபையின் செயலர் ஜேம்ஸ் நிக்கலஸ் தமிழ் எம். பி. ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் துயரங்கள் குறித்து நோபல் பரிசு பெற்றோர் நன்கு அறிந்திருந்தார்கள். சித்திரவதையும், அடக்குமுறையும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என நாம் விரும்புகின்றோம் இவ் அடிப்படையிலேயே நான் நான்கு நோபல் பரிசுபெற்றவர்களின் சமாதானத்திட்டத்தை அனுப்பியிருந்தேன். எனது சர்வதேச ரீதியிலான சமாதானப் பணியையும் உலக சபையை உருவாக்கியதையும் கருத்திற்கொண்டு 1993ஆம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசிற்கு எனது பெயரும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு உதவி

(வடமராட்சி கிழக்கு)

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு உதவித் திட்டத்தினை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடைமுறைப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ் புனர்வாழ்வு உதவித் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்திலுள்ள 907 குடும்பங்கள் முதலில் மீன்பிடி வலை உபகரணங்களைப் பெறவுள்ளனர்.

இவ் உதவி வட்டியில்லாத சுழற்சி முறைக் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் மேலும் பல குடும்பங்களுக்கு இவ் உதவி விரிவுபடுத்தப்படவுள்ளது.

இவ் உதவியினைப் பெறுபவர்கள் 27 தவணைகளில் தாம் பெற்ற வலைகள், மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான பணத்தினை செலுத்தி முடிப்பர். (36)

## குடிசை திருத்தியமைப்பு

(வடமராட்சிகிழக்கு)

தமிழர்புனர்வாழ்வுக்கழகம் வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள 185 குடிசைகளைத் திருத்தியமைப்பதற்கான பொருட்களை வழங்கி வருகிறது.

மழை காலம் அண்மிப்பதனால் இக் குடிசைகளைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (36)

# நல்லூர் தம்பதிகளுக்கு ஒரேசூலில் 4 குழந்தைகள்

[லண்டன்]

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த லண்டனில் வதியும் தம்பதிகளுக்கு ஒரேசூலில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன. லண்டன் ஹரிங்டன் பகுதியில் வசிக்கும் நல்லூரைச் சேர்ந்த சிவகாந்தன் அவரது மனைவி கோப்பாயைச் சேர்ந்த மாலினிக்குமே இவ்வாறு குழந்தைகள் பிறந்துள்ளன.

1986 செப்டம்பர் லண்டன் ஆர்ச்வே முருகன் கோவிலில் இவர்களுக்கு திருமணம் நடந்தது. கடந்த ஆறு வருடங்களாக இவர்களுக்கு குழந்தைப்பேறு கிட்டவில்லை. தங்களது நான்கு குழந்தைகளையும் ஆரோக்கியமாக பெற்றெடுத்து தருவதில் அயராது உழைத்த வெள்ளையரான டாக்டர் செல்வி மோஹானுக்கு தமிழன் பத்திரிகையூடாக இப் பெற்றோர்கள் தமது நன்றியை தெரிவித்துள்ளனர்

கர்ப்பமுற்ற 12 வாரங்களின் பின் டாக்டர் மோஹானிடம் சென்றோம். அவர் பரிசோதித்த பின் நான்கு குழந்தைகள் கருவுற்ற செய்தியை சொன்னார். நாம் பயந்து விட்டோம். ஆனால் அவர் எமக்கு உற்சாகம் தந்து எங்களுக்கு தெம்பை அளித்தார். குழந்தை இல்லை என்ற கவலையுடன் இருந்த எமக்கு ஒரே தடவையில் நான்கு குழந்தைகள் கிடைத்துவிட்டதாக அந்த பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டனர்.

# இந்திய-சிறிலங்கா கூட்டு ரோந்து குறித்து முடிவில்லை

(சென்னை)

இந்திய கடற்படைக்கும் சிறிலங்கா கடற்படைக்கும் இடையில் கூட்டு ரோந்து செய்வது குறித்து ஒப்பந்தம் தொடர்பாக இது வரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ராம்தாஸ் தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் செய்தியாளரிடம் பேசிய அவர் இரு நாட்டு கடற்படைக்கும் இடையில் சுமுக உறவு நீடித்து வருகிறது. தத்தம் பகுதிக்குள் அவர்கள் ரோந்து செய்கின்றனர். இவ்வகையில் இருபகுதியினரிடையேயும் நல்லபுரிந்துணர்வுண்டு இரு கடற்படையினரும் தீவிரவாதிகள் ஊடுருவலை கண்காணித்து கட்டுப்படுத்துவதில் நல்ல புரிந்துணர்வுடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna.
94 A/L
DAY CLASS
பகல் நேர வகுப்பு
ஆரம்பம்: 31-08-93
Tuesday 8.00 a.m.
(சி-7231)

## ஆலய உற்சவங்கள்

(குருநகர்)

ஆனைக்கோட்டை சிறி வரத விக்ன விநாயகர் ஆலய பிரம்மோற்சவம் நேற்று ஞாயிறு காலை 10 30 மணிக்கு நடைபெற்றது. கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து தினங்கள் நடைபெறும்.

இம்மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தேர்த் திருவிழாவும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★

(21)

நவாலி அத்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பதினைந்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும் உற்சவங்களை அடுத்து தேர்த் திருவிழாவும், தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★

பொன்னாலை வரதராசப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கும்.

# லஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் எழுதுநர் கைது


[கொழும்பு]

அநுராதபுர மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய எழுது வினைஞர் ஒருவர் லஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீண்டும் பதவியை ஏற்பதற்கு வழி செய்யும் வகையில் செயல்பட ரூபா பன்னிரண்டாயிரத்தை லஞ்சமாகக் கோரிப் பெற்றிருந்தார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

இதேவேளை மதவாச்சி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் ரி-56 ரகத் துப்பாக்கி போன்ற துப்பாக்கிகளுடன் வந்த மூவர் வேட்டைத் துப்பாக்கி ஒன்றையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும், முப்பதெட்டாயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றிருப்பதாக மதவாச்சி பொலிசார் கூறியுள்ளனர்.

## புதுவசந்தம் திறப்பு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு சுமார் 20,000 ரூபா செலவில் மந்திகையில் நிர்மாணிக்கப்பட்ட "புதுவசந்தம் பாலர்பாடசாலை" கட்டிடத் திறப்பு விழா தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சி இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. கிராமியப்பொறுப்பாளர் திரு. நீலன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்ற பருத்தித்துறை வட்டவைப் பொறுப்பாளர் திரு. கண்ணதாசன் குத்துவிளக்கேற்றினார். பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு ச. செவ்வந்திநாதர் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி பாலர் பாடசாலையைத் திறந்து வைத்தார். (25)

வெலிங்டன் சந்தியில்!


UNIKCO
COMPUTER CENTRE
Computer பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
BASIC Language (including Graphics, Sound & Files)
PASCAL Language (பல்கலைக்கழகம் செல்ல விரும்பவர்கட்கு மட்டும்)
d BASE III PLUS and MS - DOS
LOTUS 1-2-3 and MS - DOS
WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS
வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 29-08-93
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 30-08-93
Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)
மேலதிக விபரங்களுக்கு:
37, CLOCK TOWER ROAD, JAFFNA.
(சி-7235)

தமிழ்மதி
மூன்றாம் அகவையில் கால் பதிக்கும்
வான்மதி ஆண்டு இரண்டை பூர்த்தி செய்து
மூன்றாம் ஆண்டில் நீண்டு வளர

டத்திலுள்ள 907 குடும்பங்கள் முதலில் மீன்பிடி வலை உபகரணங்களைப் பெறவுள்ளனர்.

இவ் உதவி வட்டியில்லாத சுழற்சி முறைக் கடனடிப் படையில் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் மேலும் பல குடும்பங்களுக்கு இவ் உதவி விரிவுபடுத்தப்பட வுள்ளது.

இவ் உதவியினைப் பெறுபவர்கள் 27 தவணைகளில் தாம் பெற்ற வலைகள், மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான பணத்தினை செலுத்தி முடிப்பர். (36)

### திருத்தியமைப்பு

(வடமராட்சிகிழக்கு)

தமிழர்புனர்வாழ்வுக்கழகம் வடமராட்சி கிழக்கில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள 185 குடிசைகளைத் திருத்தியமைப்பதற்கான பொருட்களை வழங்கி வருகிறது.

மழைகாலம் அண்மிப்பதனால் இக் குடிசைகளைத் திருத்தியமைப்பதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(36)


DAY CLASS

பகல் நேர வகுப்பு

ஆரம்பம்: 31-08-93

Tuesday 8.00 a.m.

(சி-7231)



- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 29-08-93

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 30-08-93

Equipment Used: ACER, ARC Computers. (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(சி-7235)



தமிழ்மதி நகைமாடம்

மூன்றாம் அகவையில் கால் பதிக்கும்

வான்மதிக்கு

எமது நல்லாசிகள்

தமிழ்மதி நகை மாடம்

நுணுக்கமான கைவண்ண

தங்க நகைகளின்

எழில் மாடம்

தமிழ்மதி நகைமாடம்

82/6, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-7237)



வான்மதி ஆண்டு இரண்டை பூர்த்தி செய்து

மூன்றாம் ஆண்டில் நீண்டு வளர

வாழ்த்தும்

தமிழ் நிலா நகைமாடம்

தமிழ் நிலா நகை மாடம்

உயர்ந்த தரம்!

பூரண திருப்தி!!

தரமான தங்க நகைகளை

அற்புதமான வேலைப்பாட்டுடன்

செய்து பெற்றிட நீங்கள்

நாடவேண்டிய இடம்

தமிழ் நிலா நகை மாடம்

பேரூந்து நிலையம்

நெல்லியடி,

கரவெட்டி.

(சி-7236)



மக்கள்

மனதில் பதிந்த 3ஆம் ஆண்டு

உதயமாகிறது

தொழிற் சுத்தம்! அழகின் உச்சம்!!

# வான்மதி நகைமாடம்

உங்கள் நம்பிக்கை எங்கள் நாணயம்

அழகு குன்றாத தரமான தங்க நகை மாடம்

வான்மதி நகை மாடம்
171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது வளர்ச்சிக்கு ஆதரவு நல்கும்
அனைவருக்கும் எமது நல்லாசிகள்

எமது தொடர்ஸ்தாபனங்கள்:-

அழகுநிலா யாழ்ப்பாணம்
தமிழ்மதி யாழ்ப்பாணம்
தமிழ்பரிதி சாவகச்சேரி
தமிழ்நிலா நெல்லியடி கரவெட்டி
தமிழரசி கிளிநொச்சி

(சி-7244)

**வான்மதி நகை மாடம்**
**171, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**எமது வளர்ச்சிக்கு ஆதரவு நல்கும்**
**அனைவருக்கும் எமது நல்லாசிகள்**

**எமது தொடர்ஸ்தாபனங்கள்:-**

| அழகுநிலா | தமிழ்மதி | தமிழ்பரிதி | தமிழ்நிலா | தமிழரசி |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி<br>கரவெட்டி | கிளிநொச்சி |

(சி-7244)

---

வளர்ச்சிக்கு வித்திடுவோம்
உயர்ச்சிக்கு கைகொடுப்போம்

## 3ஆம் ஆண்டில் கால் பதிக்கும்
## வான்மதி நகைமாடம்

பொலிவுற வாழ்த்துகின்றோம்

# தமிழ்பரிதி
# நகைமாடம்

தென்மராட்சி மக்களின் தங்கநகைத் தேவைகளுக்கு
நம்பிக்கை நிறுவனம்

**15, புதிய சந்தை,**
**சாவகச்சேரி.**

(சி-7245)

---

## வான்மதி நகைமாடம்

## ஆண்டு மூன்றில்
## நீண்டு வளர

எமது நல்லாசிகள்

அழகு நிலா நகை மாடம்

# அழகுநிலா
# நகைமாடம்

தரமான நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

**213, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7243)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

மனித சமுதாயத்திற்கு உண்மையில் நன்மை செய்ய விரும்புபவன் தன் உழைப்பின் மூலம்தான் அவர்களை எட்ட வேண்டும்.

— ஹென்றி ஃபோர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தோல்வி யாருக்கு?

இலங்கை இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதா? என்பது குறித்து பரிந்துரை செய்வதற்கான பிரேரணையை விவாதிப்பதை ஐ.நா. சபையின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சம் தடுக்கும் துணைக்குழு இறுதி நேரத்தில் கைவிட்டது. இப்பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்த அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைக் காப்பாளர்கள் இறுதி நேரத்தில், தமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கியமையே இதற்குக் காரணமாகும்.

இவ்வாறு. பிரேரணை கொண்டுவர முற்பட்டவர்கள் இறுதி நேரததில் பின்வாங்கியமையும், பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படாமைக்கும் சிறிலங்கா அரசாங்கம் எடுத்துக் கொண்ட பாரிய அளவினதான இராஜீக முறையிலான நடவடிக்கையே காரணமாகும். ஏ. சி. எஸ். ஹமீத்திற்கு வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டதும் இதன் பொருட்டே எனவும் ஊகிக்கப்படுகின்றது.

ஆனால், தமக்கு எதிரான இப் பிரேரணை கொண்டுவராமல் தடுத்துவிட்டதாக சிறிலங்கா அரசு மனநிம்மதி அடையினும், அரசாங்கம் இதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள், அரசாங்கம் இன ஒடுக்குதலை மேற்கொள்கின்றது என்பதற்கு ஆதாரம் சேர்ப்பதாக இருக்குமே ஒழிய, ஒரு போதும், இன ஒடுக்கலை அரசாங்கம் புரியவில்லை என்பதற்கு சான்றாகாது. ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் இனப்படுகொலையைப் புரியவில்லை என்றால், ஏன் இப் பிரேரணையைத் தடுத்து நிறுத்த உயர்மட்டத்திலான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்? மாறாக, இனப்படுகொலைக்கான ஆதாரத்தை வெளியிடுமாறு பிரேரணை கொண்டு வந்தவர்களுக்கு எதிராகச் சவால் அல்லவா விட்டிருக்க வேண்டும்!

ஆகையினால் இராஜீக அணுகுமுறையில், பிரேரணையை வாபஸ் வாங்கச் செய்தமையானது சிறிலங்கா அரசாங்கத்தின் நேர்மையற்ற தனத்தையே காட்டி நிற்கின்றது. அத்தோடு, சர்வதேச அபிப்பிராயத்தை எதிர்கொள்ள சிறிலங்கா அரசாங்கத்திற்கு உள்ள அச்சத்தை வெளிக்காட்டுவதாகவும் உள்ளது.

## ஸாய்ரே இனக்கலவரம் 7000 பேர்பலி

(நைரோபி)

ஆபிரிக்க நாடான ஸாய்ரேயின் கிழக்குப் பகுதியில் கடந்த 5 மாதங்களாக இடம் பெற்றுவரும்குழுவினரின் இனக் கலகத்தில் 7000 பேர் பலியாகினர். 2,00,000 பேர் அகதிகளாகியுள்ளனர் என ஐ.நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உள்ளூர் அரசாங்க ஊழியர்களே இந்த மோதலை தூண்டியதாக கூறப்படுகின்றது. மத்திய அரசு நிலைமையை கட்டுப்படுத்த எதுவுமே செய்யவில்லை.

இக்கலவரங்களை பொலிசாரும் இராணுவத்தினருமே முன்னின்று நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த மார்ச்சில் [illegible] பகுண்டே விவசாயிகள் பன்யார்வண்டா மக்களை தாக்கியதை அடுத்தே கலகம் மூண்டது. பெரும்பாலானோர் ஆற்றில் வீசப்பட்டும் வீடுகளில் எரிக்கப்பட்டும் இறந்துள்ளனர். ஒரிடத்தில் 70 முதல் 80 பேரின் சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன.

## லொக்கர்பி குண்டு வெடிப்பு லிபியாவிற்கு காலக்கெடு

(டியூனிஸ்)

லிபியா இரு குண்டு வெடிப்பாளர்களை அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் விசாரிக்க ஒப்படைக்கும் காலக்கெடுவை லிபியா நிராகரித்துள்ளது. இவர்களை சரணடையச்செய்ய மறுப்பதன் மூலம் ஐ நாவின் கடும் தடையை எதிர்நோக்க லிபியா தயாராய் வருகிறது. ஒக்டோபர் முதலாம் திகதி இவர்களை ஒப்படைக்காவிட்டால் லிபியா மீது கடும் தடைவிதிக்கும் தீர்மானத்தை கொண்டுவரப் போவதாக பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்காவும் கூறியுள்ளன.

1988 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்து லொக்கர்பிக்கு மேலாக சென்று கொண்டிருந்தபோது குண்டினால் அமெரிக்க பயணிகள் விமானம் தகர்க்கப்பட்டதற்கு இந்த இரு லிபியர்களுமே காரணம் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதில் 251 விமானப் பயணிகளும் தரையில் இருந்த 11பேரும் பலியானது குறிப்பிடத்தக்கது.

## எதிராளியின் நண்பனே அமெரிக்கா- சிரியஜனாதிபதி

(பெய்ரூட்)

இஸ்ரேல் இன்னும் எமது எதிராளியே மத்தியஸ்தம் செய்து வைப்பதில் ஈடுபாடு காட்டும் அமெரிக்காவும் எமது நண்பனல்ல அது எதிரியின் நண்பன் என சிரிய ஜனாதிபதி ஹாபீஸ் அஸாத் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்,

அல்-ஸபீர் என்ற பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், தென் லெபனானிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றுவதற்கு போரிடும் ஹிஸ்புல்லா கெரில்லாக்களை நாம் பாதுகாக்க வேண்டும் சில சமயங்களில் அவர்களது பலம் குறையாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

லெபனானில் தாக்குதல் நடத்துவதன் மூலம் இஸ்ரேல் பேச்சுக்களில் தடையை ஏற்படுத்துகிறது. டாக்கியது இஸ்ரேல்துப்பாக்கிகளின் முன் பேச்சுக்கள் நடைபெறுவதை அமெரிக்கா எதிர்பார்க்க முடியாது. லெபனானுக்கு ஏதாவது தீமை ஏற்பட்டால் அது சிரியாவிற்கு தீமையாகக்கருதப்படும். அமெரிக்க ஈடுபாடு காரணமாகஇஸ்ரேல் லெபனான் தாக்குதலை நிறுத்தியது. அதே போன்று ஹிஸ்புல்லாக்களும் தாக்குதலை நிறுத்தினர் என்று சிரிய ஜனாதிபதி அஸாத் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க முப்படை தளபதி ரஷ்ய வழித்தோன்றல்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய முப்படைத் தளபதியாக முன்னைய சோவியத் யூனியனின் ஜெனரல் ஒருவரின் பேரனான ஜோன் ஷலிகாஷ்விலி (57) அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

போலந்தில் பிறந்த அமெ...

நேசப்படைகளின் மேல்நிலை தளபதியாக பதவி வகித்து வந்தார்.

ஷலிகாஷ்விலியின் பாட்டனார் ரஷ்ய ஸார் மன்னனின் ஜெனரலாகவும், தந்தையார் ஜோர்ஜியாவில் இராணுவ அதிகாரியாகவும் பதவி வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது தற்போது முப்படைத்...

# தமிழக இடைத் தேர்தல்கள் திகதி விரைவில் அறிவிப்பு

### உயர் நீதிமன்றத்திடம் உறுதியளிக்கப்பட்டது

(சென்னை)

தமிழ்நாட்டில் பழநி மக்களவை இராணிப் பேட்டை சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தல் திகதியை விரைவில் அறிவிப்பதாக மத்திய தேர்தல் ஆணையகம் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. இவ் விரு தொகுதிகளிலும் இம் மாதம் 19ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த தேர்தலை தேர்தல் ஆணையகம் நிறுத்தியதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா அரசு தாக்கல் செய்த மனுவை நீதிபதிகள் விசாரித்தனர்.

இத்தொகுதிகளில் தேர்தல்கள் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெற மத்திய அரசு 17 பிரிவு பரா இராணுவம் மற்றும் ஏனைய படைகளை அனுப்பிவைக்கும் என உறுதியளிக்கப் பட்டுள்ளதையடுத்து தேர்தல் ஆணையகம் இடைத்தேர்தல் திகதியை விரைவில் அறிவிக்கும் என நீதிபதிகள் நம்பிக்கை தெரிவித்தனர். தேர்தல் திகதி முடிவுசெய்யும் உரிமை தேர்தல் ஆணையகத்திடம் உள்ளது என்றும் நீதிபதிகள் கூறினர்.

## அரசியலில் மதத்தொடர்பு சட்டத்திற்கு எதிர்ப்பு

### கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்கும் சட்டமூலத்தை தோற்கடிக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில் மதவெறிக்கு எதிராக கொண்டுவரப்படுவதாக கூறப்பட்டாலும் கூட தேர்தல் நேரத்தில் மீண்டும் ஒரு அவசர கால நிலையையும் பதட்டத்தையும் இது உருவாக்கக்கூடும் என்பதால் இதனை எதிர்க்கட்சிகள் தோற்கடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறிப்பாக ஜனதாக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் இச்சட்ட மூலத்திற்கு ஆதரவு காட்டக் கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தமிழக அரசு கலைக்கப்படுவதை பாரதீய ஜனதா எதிர்க்கும்

(சென்னை)

செல்வி ஜெயலலிதா அரசை பதவியிலிருந்துநீக்குவதற்கான மத்திய அரசின்முயற்சிகளையும் பாரதீய ஜனதாக் கட்சி எதிர்க்கும்என்று அந்தக் கட்சியின் அனைத்து இந்திய பொதுச் செயலாளர் வெங்கையாநாயுடு கூறியுள்ளார்.

ஈரோடில் நேற்றுச் செய்தியாளரிடம் அவர் பேசுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு எதனையும் பதவி விலக்குவது கூட்டாட்சி உணர்விற்கு முரணானது என்றார். அப்படிச்செய்வதால்மோசமான விளைவுகள் ஏற்படும் மாநில அரசின் செயற்பாடுகளில் குறைபாடுகள் இருக்குமானால் அரசைப் பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ள மாநில மக்களுக்குத்தான் அதிகாரம் உண்டு என்றும் அவர் கூறினார்.

## சென்னை குண்டு வெடிப்பில் ஐ. எஸ். ஐக்கும் தொடர்பு?

(சென்னை)

சென்னையில் ஆர். எஸ். எஸ். தலைமையகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஆர்.டி.எஸ். பயன்படுத்தப்பட்டிருப்பதாலும், பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவு ஐ.எஸ் ஐ. இதில் ஈடுபட்டிருக்கலாம் என்பதாலும் இது பற்றி மத்திய புலனாய்வுத்துறை விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற மக்கள் அவை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.பி. வாஜ்பாய் கேட்டுள்ளார்.

மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு ஆர்.டி.எஸ் குண்டு வெடிப்புகளைக் கண்டு பிடிப்பதில் அனுபவம் இருப்பதால் அது விசாரித்தால்தான் உண்மை விரைவில் வெளிப்படும் என்றார் அவர்.

இந்தப் பிரச்சினையில் கட்சி அரசியல் கலந்து மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே தேவையற்ற பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

தமிழக காவல் துறையின் துப்பறியும் பிரிவு இந்தக் குண்டு வெடிப்பைத் தடுக்கக் கூடிய அளவிற்குச் செயற்படவில்லை என்றும் அவர் கூறினார். ஆனால் தமிழகத்தில் சட்டமும் அமைதியும் குலைந்து விட்டதாக இந்திரா காங்கிரஸ் கட்சி குறிப்பிடுவதைத் தமது கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

## கருணாநிதியின் கூற்று வியப்புக்கு உரியதல்ல

### -வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் சுதந்திர தின உரையில் பிரிவினைவாதம் இல்லை என்று தி.மு.க தலைவர் மு கருணாநிதி கூறியிருப்பது விவாதத்துக் குரியதல்ல என்றும், ஏற்கனவே அவர் ஆட்சியிலிருக்கும் போது பிரிவினை வாதத்தை ஆதரித்துப் பேசியவர் என்றும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

மதுரையில் நேற்றுச் செய்...

## பணிப்பெண்களுக்கு உதவ சவுதி அமைச்சு திட்டம்

சவுதி அரேபிய ராஜ்யத்தின் சர்வதேச விமான நிலையங்களில் ஆதரவில்லாமல் விடப்படும் வெளிநாட்டுப் பணிப்...

ஒருவர் தெரிவித்துள்ளார் அனாதரவாக விடப்பட்ட பணிப்பெண்ணை வேறொருவர் பொறுப்பேற்று வேலைக்...

அரசு மனநிம்மதி அடையினும், அரசாங்கம் இதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள், அரசாங்கம் இன ஒடுக்குதலை மேற்கொள்கின்றது என்பதற்கு ஆதாரம் சேர்ப்பதாக இருக்குமே ஒழிய, ஒருபோதும், இன ஒடுக்கலை அரசாங்கம் புரியவில்லை என்பதற்கு சான்றாகாது. ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் இனப்படுகொலையைப் புரியவில்லை என்றால், ஏன் இப்பிரேரணையைத் தடுத்து நிறுத்த உயர்மட்டத்திலான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்? மாறாக, இனப்படுகொலைக்கான ஆதாரத்தை வெளியிடுமாறு பிரேரணை கொண்டு வந்தவர்களுக்கு எதிராகச் சவால் அல்லவா விட்டிருக்க வேண்டும்!

ஆகையினால் இராஜீக அணுகுமுறையில், பிரேரணையை வாபஸ் வாங்கச் செய்தமையானது சிறிலங்கா அரசாங்கத்தின் நேர்மையற்ற தனத்தையே காட்டி நிற்கின்றது. அத்தோடு, சர்வதேச அபிப்பிராயத்தை எதிர்கொள்ள சிறிலங்கா அரசாங்கத்திற்கு உள்ள அச்சத்தை வெளிக்காட்டுவதாகவும் உள்ளது. இந்நிலையானது, சிறிலங்கா அரசாங்கம், பிரேரணையை வாபஸ் பெறச் செய்ததில் வெற்றி பெற்றிருப்பினும், அரசியல் ரீதியாக அரசிற்கான தோல்வி என்றே கொள்ளவேண்டும்.

ஆனால், இது ஐ. நா. சபையின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சம் தடுக்கும் குழுவில் ஒடுக்குமுறை அரசுகளுக்கு கிடைத்த வெற்றி என்றே கொள்ளலாம். ஆகையினால், இவ் அமைப்புக்கள் தமது அடிப்படை நோக்கங்களில் எதிர் காலத்தில் எந்தளவிற்கு முன்னேற முடியும் என்பதும் கேள்விக்குரியதாகிறது.

மேலும் சிறுபான்மை இனங்களின் காப்பாளர்களின் நிலைப்பாடானது எந்தளவிற்கு மனித உரிமை நோக்கங்கள் கொண்டவை என்பது குறித்த கேள்வியை எழவைத்துள்ளது. அதாவது சிறுபான்மையினரின் உரிமை. பாதுகாப்பு பற்றிப் பேச முற்பட்டவர்கள் இராஜீக அழுத்தங்களுக்கு உட்படுதல் என்பது அவர்களின் நோக்கங்களுக்கு முரணானதாகும். அவர்கள் தமது அடிப்படைநோக்கத்தையே கைவிட்டது போன்றதாகும்.

சிங்களப் பேரினவாத அரசாங்கம் இதுவரை பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்துள்ளது. ஆயிரக்கணக்கானோரை கைது செய்தும், சிறையில் அடைத்து சித்திரவதையும் செய்துள்ளது. அத்தோடு, பொருளாதாரத் தடை. சுதந்திரமான நடமாட்டத்திற்குத் தடை போன்ற மனிதனின் அடிப்படை உரிமைகளையும் மறுத்துள்ளது. இதற்குப் போதிய ஆதாரங்களும் உண்டு. இந்நிலையில் இலங்கையில் இன ஒடுக்குமுறை நிகழ்கின்றதென்பதைப் புரிந்து கொள்ள வேறு ஆதாரங்கள் தேவையில்லை.

இவ்வாறானதொரு நிலையில், பிரேரணை கொண்டுவர முற்பட்ட சிறுபான்மை இனங்களின் காப்பாளர்கள் பிரேரணையை வாபஸ் பெற்றமையானது, அவர்கள் மீது அரசுகள் செலுத்தும் நிர்ப்பந்தத்தின் நேரடியான விளைவாகும். ஆகையினால், சிறுபான்மை இனங்களின் உரிமைகள், மனித நேயங்கள் பற்றிப் பேசும் அமைப்புக்கள், நிறுவனங்கள் எந்தளவிற்கு சுயாதீனமான செயற்பாட்டைக் கொண்டவை என்பதில் சந்தேகங்களை இவ் அமைப்புக்களும் அங்கம் வகிக்கும் உறுப்பினரின் நாட்டின் நலன், அபிலாசை என்பன பற்றியே இறுதி முடிவாகக் கொள்கின்றனவா என்பதே ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களின் முன் இன்றுள்ள கேள்வியாகும்.

---

அஸ்-ஸபீர் என்ற பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், தென் லெபனானிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றுவதற்கு போரிடும் ஹிஸ்புல்லா கெரில்லாக்களை நாம் பாதுகாக்க வேண்டும் சில சமயங்களில் அவர்களது பலம் குறையும் பார்த்துக்கொள்ள பட்டால் அது ... தீமையாகக்கருதப்படும். அமெரிக்க ஈடுபாடு காரணமாகஇஸ்ரேல் லெபனான் தாக்குதலை நிறுத்தியது. அதே போன்று ஹிஸ்புல்லாக்களும் தாக்குதலை நிறுத்தினர் என்று சிரிய ஜனாதிபதி அஸாத் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க முப்படை தளபதி ரஷ்ய வழித்தோன்றல்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புதிய முப்படைத் தளபதியாக முன்னைய சோவியத் யூனியனின் ஜெனரல் ஒருவரின் பேரனான ஜென் ஷலிகாஷ்விலி (57) அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

போலந்தில் பிறந்த அமெரிக்க பிரஜிபடைப்பளா அதிகாரியாக இருந்த ஷலி திரைப்படைகளில் இருந்தே ஆங்கில மொழியை கற்றார். இவர் இதுவரை நேட்டோ நேசப்படைகளின் மேல்நிலை தளபதியாக பதவி வகித்து வந்தார்.

ஷலிகாஷ்விலியின் பாட்டனார் ரஷ்ய ஸார் மன்னனின் ஜெனரலாகவும், தந்தையார் ஜோர்ஜியாவில் இராணுவ அதிகாரியாகவும் பதவி வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது தற்போது முப்படைத் தளபதியாக இருக்கும் கொலின் பவலின் பதவிக்காலம் செப்டம்பரில் முடிவடைகின்றது.

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது

(டில்லி)

பஞ்சாப் மற்றும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு வெளிப்படையாக உதவுவதை நிறுத்திக்கொள்ளும்படி அமெரிக்க வெளிவிவகார அமைச்சு பாகிஸ்தானைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சு பாராளுமன்றத்தின் வெளியுறவுக் கமிட்டிக்கு எழுதிய கடிதமொன்றில், வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களுக்கு அதிகாரபூர்வமாக ஆதரவு தெரிவித்து வருவதை முற்றிலும் நிறுத்திக் கொள்ள ஆவன செய்யப்பட வேண்டும் என்றும், வன்முறையில் ஈடுபடுவோர் தஞ்சம் பெறவோ புகலிடம் பெறவோ அனுமதிப்பதை பாகிஸ்தான் அரசுமுற்றாக நிறுத்தவேண்டும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் பஞ்சாப் மற்றும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்த பாகிஸ்தான் அரசு தவறிவிட்டால் அதனை அரசே பயங்கரவாத நாடு என்ற பட்டியலில் சேர்க்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகள் அடுத்த அக்டோபரில் நடைபெறவுள்ள தேர்தலில் பங்கு கொள்வதை தடுக்கும் அவசர சட்டத்தை பாகிஸ்தான் நிறைவேற்றாவிட்டால் அந்த நாட்டை போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டிருக்கும் நாடாக அறிவிப்பதாகவும் அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

# வடகொரியா ஏவாயுதங்கள் சிரியாவுக்கு ஏற்றுமதி?

### - அமெரிக்கா, இஸ்ரேல் கவலை

(வாஷிங்டன்)

வடகொரியா சமீபத்தில் சிரியாவுக்கு ஏற்றுமதி செய்திருக்கும் ஆயுதங்கள் குறித்து அமெரிக்காவும், இஸ்ரேலும் கவலை கொண்டுள்ளன.

இவ்வாறு பெறப்பட்ட ஆயுதங்கள் 'ஸ்கட்' ரக ஏவாயுதங்களாக அல்லது ஏனைய ஏவாயுதங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேலும்வடகொரியாதனது அணு ஆயுத திட்டம்பற்றிய அச்சத்தைப் போக்க ஒத்துழைக்காவிடின் அதன் மீ[illegible] பொருளாதாரத்தடை விதி[illegible] பது குறித்து அமெரிக்கா பல முறை எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற வாரத்தில் ரஷ்ய விமானங்கள் 'ஸ்கட்' ரக ஏவாயுதங்களை வடகொரியாவிலிருந்து சிரியாவுக்கு எடுத்துச் சென்றதாகவும் இவை ஈரானுக்கும் சென்றிருக்கக் கூடும் என்றும் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபீன் கூ[illegible]யுள்ளார்.

[illegible]வடகொரியாவின் இந் நடவடிக்கை இஸ்ரேலுக்கும் [illegible]தன் பிராந்திய நாடுகளுக்[illegible]கும் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும் என்றும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

---

பதாலு இது பற்றி மத்திய புலனாய்வுத்துறை விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற மக்கள் அவை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.பி. வாஜ்பாய் கேட்டுள்ளார்.

மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு ஆர்.டி.எஸ் குண்டு வெடிப்புகளைக் கண்டு பிடிப்பதில் அனுபவம் இருப்பதால் அது விசாரித்தால்தான் உண்மை விரைவில் வெளிப்படும் என்றார் அவர்.

இந்தப் பிரச்சினையில் கட்சி அரசியல் கலந்து மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும்

னார். ஆனால் தமிழகத்தில் சட்டமும் அமைதியும் குலைந்து விட்டதாக இந்திரா காங்கிரஸ் கட்சி குறிப்பிடுவதைத் தமது கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

களில் குறைபாடுகள் இருக்குமானால் அரசைப் பதவி நீக்கம் செய்யும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ள மாநில மக்களுக்குத்தான் அதிகாரம் உண்டு என்றும் அவர் கூறினார்.

# கருணாநிதியின் கூற்று வியப்புக்கு உரியதல்ல

### -வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் சுதந்திர தின உரையில் பிரிவினைவாதம் இல்லை என்று தி. மு. க தலைவர் மு கருணாநிதி கூறியிருப்பது விவாதத்துக்குரியதல்ல என்றும், ஏற்கனவே அவர் ஆட்சியிலிருக்கும் போது பிரிவினை வாதத்தை ஆதரித்துப் பேசியவர் என்றும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

மதுரையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. அரசு மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டிருப்பதால் அந்தக் கட்சி ஐந்தாண்டு காலம் பதவியில் இருக்க வேண்டும் என்பதே இந்திரா காங்கிரசின் விருப்பம் ஆனால் அது தனது சொந்த முரண்பாடுகளால் கவிழுமேயானால் அது பற்றி தனது கட்சி வருந்தாது என்றும் தெரிவித்தார்.

# பணிப்பெண்களுக்கு உதவ சவுதி அமைச்சு திட்டம்

சவுதி அரேபிய ராஜ்யத்தின் சர்வதேச விமான நிலையங்களில் ஆதரவில்லாமல் விடப்படும் வெளிநாட்டுப் பணிப்பெண்களுக்குத் தங்குமிட வசதியையும், நிதி உதவியையும் வழங்க அந்தநாட்டுத்தொழில் அமைச்சு ஒழுங்குகள் செய்துள்ளது.

பணிப்பெண்கள் சமூகநலவகார திணைக்களத்தில் பாதுகாப்பில் இருக்கும் காலத்தில் இவர்களை விமான நிலையத்தில் பொறுப்பேற்கத் தவறிய முகவருக்கு நாளொன்றுக்கு 200 றியால் தண்டம் விதிக்கப்படும் என்று சவுதி தொழில் அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் அனாதரவாக விடப்பட்ட பணிப்பெண்ணை வேறொருவர் பொறுப்பேற்று வேலைக்கமர்த்திக் கொள்ளும் வரை இந்தத் தண்டப்பணம் வசூலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தமது எஜமானர்களுடன் பிரச்சினை உள்ள பணிப்பெண்களுக்கு அவர்களுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளை வழங்கிய பின், தத்தமது தூதுவராலயங்கள்மூலம் அவரவர் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என சவுதி தொழில் அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

# தமிழகம் இறக்குமதி செய்த நிலக்கரிமீது சுங்க சோதனை

(சென்னை)

தமிழக அரசினால் இறக்குமதி செய்யப்பட்டு சென்னை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலக்கரியை சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்த சுங்க இலாகாவுக்கு உரிமை உண்டு என்று மாநில எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

சேலம் நகரில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் அவுஸ்ரேலியாவில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதற்குத்தான் மத்திய அரசு அனுமதி அளித்திருந்தது என்றும், ஆனால் இந்தோனேசியாவிலிருந்து தமிழக அரசு நிலக்கரியை இறக்குமதி செய்திருப்பது உள்நோக்கமுடையது என்றும் தெரிவித்தார்.

# மக்கள்கட்சி பிரமுகரின் கொலையுடன்தொடர்பில்லை

### - நவாப் ஷெரீப் மறுப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட மக்கள் கட்சிப் பிரமுகரின் கொலைக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப் கூறியுள்ளார்.

நவாப் ஷெரீபும் அவரது ஆலோசகரும் முன்னாள் உளவுப் பிரிவுத் தலைவருமான இம்தியாஸ் அக மட்டும் இக்கொலைக்கு திட்டமிட்டதாகக்கூறி இறந்த அரசியல் பிரமுகரின் சகோதரர் வழக்கு தாக்கல் செய்திருப்பது தெரிந்ததே.

# குறைந்தது

ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகளை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளதையடுத்து வெளிநாட்டு அகதிகள் வருகை வெகுவாக குறைந்துள்ளது. முன்னர் நாளாந்தம் 200அகதிகள் பிராங்போர்ட் விமான நிலையம் வந்து சேர்ந்தனர்: தற்போது 30க்கும் குறைவான அகதிகளே வருகின்றனர். இப்போது விமானநிலையத்தில் வைத்தே அகதிகள் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

# குண்டுராவ் காலமானார்

கர்நாடக மாநில முதல்வராக இருந்தவரும், இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான குண்டுராவ் லண்டனில் நேற்று காலமானார் இருதய சிகிச்சை பெறுவதற்காக லண்டன் சென்ற அவர் அங்கு மரணமடைந்தார் 1980—83 வரை கர்நாடக மாநில முதல்வராக இருந்த இவரது மறைவுக்கு பிரதமர் நரசிம்மராவ், முதல்வர் பங்காரப்பா உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# சதியில் சூடான்

நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயம், எப்.பி ஐ உளவுப்பிரிவு தலைமையகம் ஆகியவற்றை குண்டு வைத்து தகர்க்க மேற்கொள்ளப்பட்ட சதியில் உயர் சூடான் அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என அமெரிக்க உளவு அதிகாரிகள் கூறினர். ஐ நாவிலுள்ள சூடான் தூதுவின் நடவடிக்கைகளை கடந்த இரு மாதங்களாக கண்காணித்து வந்த பின்பும். வேறு ஆதாரங்களை கொண்டும் சூடான் இஸ்லாமிய அரசு சதியில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்ததாக அதிகாரிகள் கூறினர்.

இதன்காரணமாக அமெரிக்காவின் உலக பயங்கரவாத நாடுகள் பட்டியலில் சூடானும் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஈழநாதம்

# முக்கிய பணி தரப்பட்டிருப்பதாக சிவராசன் சாந்தனிடம் கூறினார்

## ராஜீவ் கொலைவழக்கில் அரச சட்டத்தரணி

(சென்னை)

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் கே. பத்மநாபாவையும் அவரது சகாக்களையும், அழிப்பதில் சிவராசவின் பணிகள், அவரது செயற்பாடுகளை யிட்டு விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ஒரு எண்ணப் பதிவை மனதில் ஏற்படுத்தியதினாலேயே ராஜீவ்காந்தி படுகொலை செய்யும் சதித்திட்டத்திற்கு சிவராசன் தெரிவு செய்யப்பட்டார் என ராஜீவ் கொலை வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு சட்டத்தரணி டானியல் தெரிவித்தார். அத்துடன் சிவராசனுக்கு சென்னை நகர் பற்றிய அறிவும், தமிழ் நாட்டுக்காரர் போல் பேசக்கூடிய ஆற்றலும் இருந்ததாக அரச தரப்பு சட்டத்தரணி கூறினார்.

சென்னையில் பத்மநாபாவையும் அவரது சகாக்களையும் கொலை செய்தபின்னர் சிவராசன்மீது விடுதலைப் புலிகளின் தலைமை கவனம் செலுத்தியது. அதன் பின்னர் தனக்கு ஒரு முக்கியபணி தரப்பட்டுள்ளதாக சிவராசன் சாந்தனிடம் கூறியிருக்கிறார் என்றும் சட்டத்தரணி டானியல் குறிப்பிட்டார்.

இலங்கையைச் சேர்ந்த ஒன்பது சாட்சியங்களின் அறிக்கைகளின் ஊடாக சிவராசன் அடையாளத்தையும் விடுதலைப் புலிகளுடன் அவருக்குள்ள தொடர்பையும் நிரூபிக்க அரச தரப்பு சட்டத்தரணி டானியல் முற்பட்டார். அவர் மேலும் கூறுகையில்; ''சிவராசனின் இயற்பெயர் சந்திரசேகரன் பாக்கியசந்திரன். 1980 வரையில் இலங்கை மின்சாரசபை ஊழியராக இருந்தார். பின்னர் அப்பதவியை துறந்துவிட்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். ரகுவரன் என்ற இயக்கப் பெயரை பெற்றார். ராஜீவ் கொலை சதியில் சிவராசன் என்ற பெயரில் இயங்க அவருக்கு பணிக்கப்பட்டது. சந்திரசேகரன் பாக்கிய சந்திரன் தனது புகைப்படங்களுடன் இலங்கை அரசிடம் இருந்து அடையாள அட்டை பெறுவதற்காக செய்திருந்த விண்ணப்பத்தின் பிரதிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது'' என தெரிவித்தார்.

வீடியோ ஒளிப்பதிவு நாடாக்கள் இரண்டு குறித்து குறிப்பிட்ட (சட்டத்தரணி டானியல் இதில் முதலாவது வீடியோ நாடா இந்திய அரசியல்வாதி ஒருவர் 1989இல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தபோது ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இரண்டாவது வீடியோ நாடா முன்னாள்பிரதமர் வி.பி.சிங் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சிவராசன் இருப்பதை காட்டுகிறது என்றார்.

## லலித் கொலை அறிக்கை

# ஸ்கொட்லண்ட்யார்ட் தனது புகழை இழந்தது

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி படுகொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் என லண்டன் துப்பறியும் பொலிஸ் பிரிவான ஸ்கொட்லண்ட்யார்ட் அறிக்கையை சிறிலங்காவின் மூவர் கொண்ட பிரபல சட்டத்தரணிகள் குழு கண்டித்துள்ளது.

கொலையை தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப் படமுன் நிலவிய ஊகங்களை அடிப்படையாக வைத்து ஸ்கொட்லண்ட்யார்ட் தனது முடிவை அறிவித்துள்ளது. ஸ்கொட்லண்ட்யார்ட்டின் புகழும் பெருமைக்கும் அது இப்போது தகுதியானது அல்ல என்பது நிரூபணமாகிவிட்டது என சட்டத்தரணிகள் குழு தனது 50 பக்க அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி வழக்கறிஞர்களான தயாபெரேரா ரஞ்சித் அபேசூரியா, லக்ஷ்மன் கதிரிகா ஆகியோரே இந்த மூன்று சட்டத்தரணிகளுமாகும். அவர்களது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஹாரண வீதியில் கிடந்த சடலம் லலித் கொலையாளியின் சடலம்தான் எனக் கூறிய ஸ்கொட்லண்ட்யார்ட், பூர்வாங்க விசாரணையின்போது பொலிசாரினால் கொடுக்கப்படாத பொருட்களை தமது அறிக்கையில் சேர்த்துள்ளதுடன் திறப்புக்கோர்வை ஒன்றை ஆதாரமாகக்காட்டி அதன் மூலம் அப்பகுதி கொலையாளி இருந்த இடம் எனக்காட்ட முயன்றுள்ளதையும் கண்டிக்கின்றோம்.

அத்துலத்முதலியுடன் புலிகள் கொண்டிருந்த பகையை எடுத்துக்காட்டி ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் அத்துலத்முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்ததை ஸ்கொட்லண்ட்யார்ட் மேற்கோள்காட்டி புலிகள் மீது இக்கொலைப்பழியை சுமத்த முயன்றிருக்கின்றது. சிறிலங்கா பொலிசாரும் முன்னர் இக்கொலையை புலிகளே மேற்கொண்டதாக கூறியபோதிலும் அது குறித்து போதுமான ஆதாரம் தமக்கு கிடைக்கவில்லை என ஒப்புக்கொண்டனர். ஆனால் பொலிசார் குறிப்பிட்ட தடய பொருட்களைவிட ஸ்கொட்லண்ட்யார்டின் அறிக்கையில் வேறு சில தடய பொருட்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஸ்கொட்லண்ட்யார்ட் அறிக்கையில் லலித்தின் மெய்ப்பாதுகாவலரிடமிருந்த குறைகளே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆனால் பொலிசாரின் குறைபாடுகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அந்த சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

## கல்வி வளர்ச்சிக்கழக ஓராண்டு நிறைவு விழா

(நமது நிருபர்)

சித்தன்கேணி கல்வி வளர்ச்சிகழக ஓராண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 3. 30 மணியளவில் சித்தன்கேணியில் நடைபெறவுள்ளது.

மாணவர் அமைப்பின் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பொறுப்பாளர் திரு. சி. தமிழ் மறவன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். மாவட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி ம. வாசுகி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வுகளின் இறுதியில் இரவு 7. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

## முல்லைப் போராளிகளுக்கு மக்கள் இறுதி அஞ்சலி

ஆனையிறவுப் பகுதியில் கடந்தவெள்ளிக்கிழமை இடம் பெற்ற வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரு வேங்கைகளினதும் வித்துடல்கள் முள்ளியவளையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

2ஆம் லெப். வீரமணி (கிளிசுட்டான் நெடுங்கேணி) 2ஆம் லெப். வள்ளுவன் (முத்தையன் கட்டு) ஆகிய இரு வேங்கைகளினதும் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் இராணுவ மரியாதைகளுடனும் பாண்ட் வாத்திய இசையுடனும் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

## கல்விக் கல்லூரி விபரம் வந்தது

(யாழ்ப்பாணம்)

வவுனியா கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிப்போரிற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அது தொடர்பான மேலதிக விபரங்கள் என்பன யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

## உடுகம்பொலவிற்கு நான்கு மெய்ப்பாதுகாவலர்

(கொழும்பு)

துறைமுக அதிகாரசபையின் உதவித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசஉடுகம்பொலவிற்கு நான்கு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

1989இல் ஜே.வி.பியினரின் கிளர்ச்சியை கொடூரமான முறையில் ஒடுக்ுவதில் பெரும்பங்கு வகித்ததாக கூறப்படும் பிரேமதாச உடுகம்பொல முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் அரசாங்கத்திற்கெதிராக பல குற்றச்சாட்டுகளை முன்வைத்ததையடுத்து இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இதனால் தலைமறைவாகியிருந்ததும் பின்னர் புதிய அரசாங்கத்துடனான சமரசத்தையடுத்து துறைமுக அதிகார சபையின் உதவித் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவினால் நியமிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இவர் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டதை அடுத்து இவருக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டிருந்தனர். இதுபோதாதென உடுகம்பொல முறையிட்டதை அடுத்து மேலும் இருவர் பாது...

## ஜெனரல் சிறில் ரணதுங்காவின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள அவுஸ்திரேலியா தயக்கம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கான சிறிலங்கா தூதுவராக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஜெனரல்சிறில் ரணதுங்காவை ஏற்பதற்கு அவுஸ்திரேலிய அரசு தயங்கியது எனத் தற்போது தெரிய வருகிறது.

...காது என்றும் தெரிவித்திருந்ததாம். இதனால் பல கோடி ரூபா பொருள் செலவில் அவரது அலுவலகமும், இருப்பிடமும் திருத்தப்பட்டதாம். ஆனால் அவரது பாதுகாப்புக்காக செய்யப்பட்ட இந்த ஏற்பாடுகள் மூன்று மாதங்கள் கூட நீடிக்...

## வீரவணக்கக் கூட்டம்

வலிகாமம் கோட்டம் கோப்பாய் வட்டத்தில் ஏழாம் எட்டாம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு கோப்பாய் தெற்கு பருத்தித்துறை வீதி மாதா கோவில் முன்பாக நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## முத்தா மாணிக்கமா மேடையேற்றம்

பாஷையூர் வளர்பிறை நாடகமன்ற அளிக்கும் ''முத்தா மாணிக்கமா'' என்னும் நாட்டுக்கூத்து நாளை மறுதினம் செவ்வாயன்று இரவு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

## யாழ். போதனா வைத்தியசாலையில் 2 மணித்தியாலம் மட்டும் தொழிற்படும் ஜெனரேற்றர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கான மட்டுப்படுத்தப்பட்ட இரண்டு மணித்தியாலங்கள் மின் சேவையில் 85 கிலோ வாற் மின் பிறப்பாக்கி ஈடுபட்டுள்ளது.

மேற்படி மின் பிறப்பாக்கி பல முறை பழுதடைந்து திருத்தப்பட்டுள்ளது. இது மீண்டும் பழுதடையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து இம் மின் பிறப்பாக்கியின் சேவை நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இம் மின் பிறப்பாக்கிக்கான உதிரிப்பாகங்கள் இலங்கையில்கிடைக்காமையை அடுத்து பிரித்தானியாவில் இருந்து மேற்படி மின் பிறப்பாக்கி உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றிடம் இருந்து உதிரிப்பாகங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டமை தெரிந்ததே.

இவ் உதிரிப்பாகங்கள் வந்து சேர்ந்ததும் இம் மின் பிறப்பாக்கியில் இருந்து முழு அளவிலான சேவையையும் பெற்றுக்கொள்ளமுடியுமென யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிந்தன. (பா)

## போட்டி

வியாபாரிமூலை தளிர்கள் பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டிநாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இன்பருட்டி காண்டீபன் விளையாட்டரங்கில் அ. பரமேஸ்வரன் தலைமையில்நடைபெறும். (யோ)

## பதவி ஏற்பு

(கொழும்பு)

பிரிட்டிஷிற்கான சிறிலங்கா தூதுவராக ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார். ஜெனரல் ரணதுங்க இதுவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர்...

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்தியாப்பிள்ளை இராசம்மா

கரவெட்டி முன்னாள் தபால் அதிபரின் அன்பு மனைவி திருமதி சந்தியாப்பிள்ளை இராசம்மா 22-08-1993 அன்று காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற தபால் அதிபர் திரு. வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி A. பிரேமா, விக்ரர் செல்வராசா (லண்டன்), அருட்திரு S. V. B. மங்களராசா (கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்), S. V. F. இரட்ணராசா (நியூசிலாந்து), திருமதி A. T. ஜெசிந்தா ஜெயசீலி (ஆசிரியை வதிரி திரு. இருதயக்கல்லூரி), S. V. C. புனிதராசா (கனடா), Dr S. V. J ஞானராசா (Base Hospital குருநாகல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. [illegible]

கைகளின் ஊடாக சிவராசன் யல்வாதி ஒருவர் 1989இல்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### சந்தியாப்பிள்ளை இராசம்மா

சரவெட்டி முன்னாள் தபால் அதிபரின் அன்பு மனைவி திருமதி சந்தியாப்பிள்ளை இராசம்மா 22-08-1993 அன்று காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற தபால் அதிபர் திரு. வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி A. பிரேமா, விக்ரர் செல்வராசா (லண்டன்), அருட்திரு S. V. B. மங்களராசா (கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்), S. V. F. இரட்ணராசா (நியூசிலாந்து), திருமதி A. T. ஜெசிந்தா ஜெயசீலி (ஆசிரியை வதிரி திரு. இருதயக்கல்லூரி), S. V. C. புனிதராசா (கனடா), Dr S. V. J ஞானராசா (Base Hospital குருநாகல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. R. E. ஆனந்தராசா (பிறேமா றேடர்ஸ் நெல்லியடி), திரு. M. A. தவரதினராசா (ஆசிரியர் புனித அந்தோணியார் கல்லூரி ஊர்காவற்றுறை, போதனாசிரியர் தொலைக்கல்வி மத்திய நிலையம், கரவெட்டி), திருமதி V. ஜெனிவி (லண்டன்), திருமதி இ. கிருபாகரி (நியூசிலாந்து), திருமதி P. யூடி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மஞ்சுரிக்கா, சந்திரிக்கா, தர்ஷிக்கா, டோமினிச், றெனி, ஜோண், யூலியன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. சந்தியாப்பிள்ளை இராசையா, அருட் செல்வி லெற்றீசியா (திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்) திருமதி ம. றோசம்மா, திருமதி வ. ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருட் செல்வி ஜோலண்ட் (அதிபர் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை), அருட்செல்வி மாறி யூடிற் (கார்மேலற் மடம் முந்தல்) ஆகியோரின் அன்ரியும், அருட்செல்வி S. ஜோசப்பின் (திருக்குடும்பக் கன்னியர் மடம், வவுனியா) அவரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக திருப்பலியின் பின் கரவை கிறிப்பல்லி சேமக்காலைக்கு (24-08-1993) செவ்வாய்க்கிழமை நாளை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தபாற்கந்தோர் எதிர்,
சரவெட்டி.
(5757)

தகவல்:
திரு. வ. சந்தியாப்பிள்ளை
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

---

கொல்லங்கலட்டி

### வைரவப்பிள்ளை சின்னத்தம்பி
(அப்பா அண்ணை)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், துரைசிங்கம், தனபாலசிங்கம் (குஞ்சர்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய வைரவப்பிள்ளை சின்னத்தம்பி 22-8-93 ஞாயிறு மு. ப. 6-45 மணியளவில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் தகனக்கிரியைகள் அன்றையதினம் பி. ப. 5 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சுழிபுரம் மேற்கு.

தகவல்:
பிள்ளைகள்.

(5761)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆனையிறவுப் பகுதியில் கடந்தவெள்ளிக்கிழமை இடம் பெற்ற வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரு வேங்கைகளினதும் வித்துடல்கள் முள்ளியவளையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

2ஆம் லெப். வீரமணி (கிளி சுட்டான் நெடுங்கேணி) 2ஆம் லெப். வள்ளுவன் (முத்தையன் கட்டு) ஆகிய இரு வேங்கைகளினதும் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் இராணுவ மரியாதைகளுடனும் பாண்ட் வாத்திய இசையுடனும் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது

## கல்விக் கல்லூரி விபரம் வந்தது

(யாழ்ப்பாணம்)

வவுனியா கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிப்போரிற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அது தொடர்பான மேலதிக விபரங்கள் என்பன யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்தமாதம் 2ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும் விரும்புவோர் யாழ். கல்வித் திணைக்கள வேலைநாட்களில் விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களைபெற்றுக் கொள்ளுமாறு யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## பயிற்சி நெறி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினால் "சக்தி" பற்றிய விரிவான பயிற்சி நெறி ஒன்று நடாத்தப்படவுள்ளது. இப் பயிற்சி நெறி நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் இரு வாரங்களிற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இவ் இலவசப் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெறலாமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

---

குற்றப்

தினம் கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து 25க்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்களை புலனாய்வுத்துறையினர் கைது செய்து கொண்டு சென்றதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள விடுதிகளில் இருந்து 35க்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்களை பொலிசார் சுற்றிவளைத்து கைது செய்தமை தெரிந்ததே.

துறைமுக அதிகாரசபையின் உதவித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவிற்கு நான்கு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

1989இல் ஜே.வி.பியினரின் முறையில் ஒடுக்குவதில் பெரும் பங்கு வகித்ததாக கூறப்படும் பிரேமதாச உடுகம்பொல முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் அரசாங்கத்திற்கெதிராக பல குற்றச்சாட்டுகளை முன் வைத்ததையடுத்து இவருக்கு எதிராக வழக்குத் தொடரப் பட்டது.

இதனால் தலைமறைவாகியிருந்ததும் பின்னர் புதிய அரசாங்கத்துடனான சமரசத்தையடுத்து துறைமுக அதிகார சபையின் உதவித் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவினால் நியமிக்கப் பட்டதும் தெரிந்ததே.

இவர் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டதை அடுத்து இவருக்கு இரண்டு மெய்ப் பாதுகாவலர்கள் வழங்கப்பட்டிருந்தனர். இதுபோதாதென உடுகம்பொல முறையிட்டதை அடுத்து மேலும் இருவர் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜெனரல் சிறில் ரணதுங்காவின்

## நியமனத்தைஏற்றுக்கொள்ள அவுஸ்திரேலியா தயக்கம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கான சிறிலங்கா தூதுவராக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின்செயலாளர்ஜெனரல்சிறில் ரணதுங்காவை ஏற்பதற்கு அவுஸ்திரேலிய அரசு தயங்கியது எனத் தற்போது தெரிய வருகிறது.

சிறில் ரணதுங்க மே முதல் திகதி முதல் அவுஸ்திரேலியத் தூதுவராக பதவி ஏற்றுக் கொண்டிருந்ததும் சட்டத்தரணி நிசங்க விஜேசுந்தர தற்போது அப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதும் தெரிந்ததே.

சிறில் ரணதுங்காவை சிறிலங்காவின் தூதுவராக ஏற்கத் தயங்கிய அவுஸ்திரேலிய அரசு அவர் நியமனம் பெறுமிடத்து அவரது பாதுகாப்பை அவுஸ்திரேலியா பொறுப்பேற்காது என்றும் தெரிவித்திருந்ததாம். இதனால் பல கோடி ரூபா பொருள் செலவில் அவரது அலுவலகமும், இருப்பிடமும் திருத்தப்பட்டதாம். ஆனால் அவரது பாதுகாப்புக்காக செய்யப்பட்ட இந்த ஏற்பாடுகள் மூன்று மாதங்கள் கூட நீடிக்காத நிலையில் இவர் தற்போது இலண்டனுக்கான தூதுவராக இடமாற்றப்பட்டுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியா தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் நிசங்க விஜேசுந்தர, கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரான்லி விஜேசுந்தரரின் சகோதரர் என்பதும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பிரதிநிதித்துவம் செய்த யட்டிநுவரத் தொகுதியை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் வேறுபாடு காரணமாக

## சுமத்தப்பட்ட வழக்குகள் மீளப்பெற நடவடிக்கை

(கொழும்பு)

பிரேமதாசா ஆட்சிக் காலத்தின் போது அரசியல் காரணங்களின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்குகளை மீளப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

இந் நாட்டினுள் தங்கக்கட்டிகள் கடத்தி வந்தமை தொடர்பாக உயர்மட்ட நபர் ஒருவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு மற்றும் இளம் அரசியல்வாதி ஒருவர் மீது சுமத்தப்பட்டிருந்த கொலைக் குற்றச்சாட்டு வழக்கு என்பனவற்றை மீளப் பெற்றுவிடும்படி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோல் அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக பிரேமதாசா அரசினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மீளப் பெறப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

---

தீவகத்திலும்

டும்.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் தீவகம் இருக்கின்றபோதிலும் இவர்களின் அனுமதி இன்றி பொருள்கள் எதுவும் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கிறது. [யோ]

---

என் வாகனத்தின்

வந்தவரும் லொறியை விட்டு வெளியே பாய்ந்து படுத்து விட்டோம். எழுந்து பார்த்த போது பெண் இறந்து கிடந்தார். பின்னர் குழந்தையும் இறந்துவிட்டது. அதே பாதையில் போய்க்கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்த ஒருவரும் காயமடைந்தார். அவரை எனது லொறியில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்" என்றார். [86]

---

கடற்படைப்

நடத்தி வருவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிளாலி கடற் பரப்பில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இடம்பெற்றதாகவும் வேறுசில செய்திகள் தெரிவிக்கின்றன. (86)

றுக்கொள்ளமுடியுமென யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## போட்டி

வியாபாரிமூலை தளிர்கள் பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டி நாளைசெவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இன்பருட்டி காண்டீபன் விளையாட்டரங்கில் அ. பரமேஸ்வரன் தலைமையில்நடைபெறும். (யோ)

## பதவி ஏற்பு

(கொழும்பு)

பிரிட்டிஷிற்கான சிறிலங்கா தூதுவராக ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார். ஜெனரல் ரணதுங்க இதுவரை பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 22-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10657

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
28-0882, 40-6979, 26-7546, 26-6264, 24-8429, 26-0560, 28-3289, 24-5461, 24-8071, 26-6197, 41-5015, 26-2421, 24-0422, 24-5416, 27-9779, 26-5604, 24-5958, 41-8432, 24-6280.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
41 9895, 24-0521, 26-2391, 24-5241, 26-0382, 41-6933, 28-1799.

---

சரசாலை சோபன் குடியேற்றத்திட்டம்
சோபன் சனசமூக நிலையம்

## முதல் ஆண்டு நிறைவு விழா
## 28. 08. 93

ஓட்டப்போட்டிகள்:

1. 30 மைல் சைக்கிள்ஓட்டப்போட்டி (பொது)
2. 25 ,, ,, ,, (இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கிடை)
3. விளையாட்டுப் போட்டி

கலை நிகழ்ச்சிகள்

முதலாம் பரிசு தங்கப்பதக்கம்
மற்றும் பெறுமதிமிக்க பரிசுகள்

27-8-93ற்கு முன்னதாக உங்கள் பெயர்களை முகாம் பொறுப்பாளர், சோபன் குடியேற்றத்திட்டம் சரசாலை தெற்கு, சாவகச்சேரி என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளவும்.

முகாம் பொறுப்பாளர்

(5760)